**திண்டுக்கல் மாவட்டக் கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர்: திரு வெ.சீத்தாராமன், எம்.ஏ.,**

*******

ந.க.எண்.16674/2018/அ1, நாள்.06.03.2020

(திருவள்ளுவராண்டு 2051, மாசி 23)

பொருள்: பொதுப்பணிகள் - கருவூல கணக்குத் துறை - திண்டுக்கல் மாவட்ட கருவூல அலகு - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிக்கான தேர்வு - IIA - 2017-2018 - திரு.ரா.சரவணக்குமார், கணக்கர், மாவட்டக் கருவூலம், திண்டுக்கல் - பணிவரன்முறை செய்தல் - ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடித எண்:6010/PSD- D / 2018, நாள்:01.11.2018.
2. சென்னை, கருவூலக் கணக்குத் துறை முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் செ.மு.ஆ.ந.க.எண்: 42506/2018/சி3, நாள்:19.11.18.
3. சென்னை, சம்பள கணக்கு அலுவலகம் (தெற்கு), சம்பள கணக்கு அலுவலர் அவர்களின் கடிதம் செ.மு.ஆ.ந.க.21075/2019/A2, நாள்.03.09.2019.

*******

**ஆணை:**

பார்வை 2-ல் காணும் சென்னை, கருவூலக் கணக்குத் துறை முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2017-2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிக்கான தேர்வு - IIA-ன் மூலம் தெரிவு செய்யப்பட்டு 04.12.2018 அன்று சென்னை, சம்பள கணக்கு (தெற்கு) அலுவலகத்தில் கணக்கராக பணி நியமனம் செய்யப்பட்டு, பின்பு பார்வை 3-ல் காணும் செயல்முறை ஆணையின் மூலம் பணிமாறுதலில் திண்டுக்கல் மாவட்ட கருவூலத்தில் பணியேற்றுக்கொண்ட திரு.ரா.சரவணக்குமார், கணக்கரின் பணிகள் "The regularization is subject to the outcome of the WP Pending of the files of the Madras/Madurai Bench of the Honourable High Court, Madras relating the Group II-A 2017-2018 recruitment" மேற்கண்ட நிபந்தனையுடன் தமிழ்நாடு சார்நிலைப் பணிகள் விதி 23(அ)-ன்படி தனியர் பணியேற்ற நாளான 04.12.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

2. தமிழ்நாடு சார்நிலைப் பணி விதி 27-ன்படி மேற்கண்ட கணக்கர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் தொடர்ந்து இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

3. மேலும், தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகள் இணைப்பு V-ன்படி தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படை பயிற்சியை நிறைவு செய்து அதில் தேர்ச்சி பெற வேண்டுமெனவும், தமிழ்நாடு சார்நிலைப் பணி அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் I மற்றும் II, தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் ஆகிய தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

10/3/2020

கருவூல அலுவலர்,
திண்டுக்கல்.

10/03/2020

பெறுநர்

1. திரு.ரா.சரவணக்குமார்,
   கணக்கர்,
   மாவட்டக் கருவூலம்,
   திண்டுக்கல்.

2. அ2/முதன்மை ஆணைத் தொகுப்பு

3. உதிரி - 1.